தினத்தந்தி

# காரைக்கால் மாவட்ட செய்திகள்



### பாலிடெக்னிக் கல்லூரியில்

## குழந்தைகளுக்கான அறிவியல் கண்காட்சி

காரைக்கால், ஜூலை.21- காரைக்கால் மார்க் துறை முகம், சென்னை ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பு சார்பில் அப்துல்கலாம் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறக்கட்டளை கடந்த மார்தம் தொடங்கப்பட்டது. இந்த அறக்கட்டளை சார் பில் காரைக்கால் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் குழந்தைகள் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. இதில் காரைக்கால், நாகை, நாகூர் ஆகிய பகுதிகளில் இருந்து 700-க்கும் மேற்பட்ட வர்கள் கலந்துகொண்டனர். இவர்கள் ரோபாட்டிக்ஸ், ஏரோஸ்பேஸ், மின்னணு, விவசாயம், வேதியியல், இயற்பியல் உள்பட நூற்றுக்கணக்கான அறிவியல் மாதிரிகள் மற்றும் கண்டுபிடிப்புகளை காட்சிக்கு வைத்திருந்தனர்.

கண்காட்சியில் காரைக்கால் மார்க் துறைமுக தலைவர் ஜி.ஆர்.கே.ரெட்டி தலைமை தாங்கி, மாணவர்களை ஊக்கப்படுத்தி பேசினார். நிகழ்ச்சியில் கீதா ஆனந்தன் எம்.எல்.ஏ, மாவட்ட கலெக்டர் கேசவன், ஏ.ஐ.சி.டி.இ. முன்னாள் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.மாந்தா, கொல்கத்தா துறைமுக பொறுப்புக்கழக நிர்வாகி ரேஷ்மா நிலோபர் நாகா, கல்பாக்கம் அணுமின் நிலைய விஞ்ஞானி பேராசிரியர் டாக்டர் வைதேகி கணேசன், டாக்டர் அமர்பிரசாத், சிறந்த படைப்புக்கு தேசிய விருது பெற்ற சிறுவன் சபரிவெங்கட் உள்பட பலர் கலந்துகொண்டனர்.